000246
18 JAN 2012
சென்னை

சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெறும் வகையில் 2011–12 – ஆம் ஆண்டிற்கான மாநில அரசின் சிறப்பு மாநில நிதியுதவியின் கீழ் ரூ.25.00 கோடியில் (ரூபாய் இருபத்தைந்து கோடி மட்டும்) செயல்படுத்தப்படவுள்ள புதிய பயிற்சித் திட்டங்கள் – நிதி ஒப்பளிப்பு – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (சிஉ.தி1) நலத்துறை**

அரசாணை (நிலை) எண். 4 நாள்: 6.1.2012

திருவள்ளுவராண்டு 2042, மார்கழி 21

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.115, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 23.9.2010.
2. அரசு கடித எண்.15473/சிஉ.தி1/2011–1, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉ.தி1) துறை, நாள் 10.9.2011.
3. மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களின் கடித எண்.டி2/2117/2011 நாள் 22.9.2011.

..........

பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில் 2010–2011–ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் பயன்பெறும் வகையில் மாநில அரசின் சிறப்பு மாநில நிதியுதவியின் கீழ் புதிய பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான ஆணை வெளியிடப்பட்டது.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி சமுதாயத்தில் மற்றவர்களுக்கு இணையாக வாழ வழிவகுக்க வேண்டும் என்ற கருத்தினை மையமாகக் கொண்டு, தாட்கோ மூலம் பல்வேறு செயல் திட்டங்களை அரசு ஒவ்வோர் ஆண்டும் திறம்பட நிறைவேற்றி வருகிறது. மேலும், சுயதொழில் வேலைவாய்ப்பு, தனிநபர் வருவாய் ஈட்டும் பல்வேறு திட்டங்கள், நிலமற்ற ஆதிதிராவிடர்களுக்கு நிலம் வழங்கும் திட்டம் மற்றும் நலிவுற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு தொடர்ந்து வருவாய் ஈட்டும் வகையில் தொழில்கள் துவங்குதல் போன்ற பல்வேறு திட்டங்கள் ஒவ்வோர் ஆண்டும் மாநில செயல் திட்டம் மூலம் மைய அரசின் சிறப்பு நிதியுதவியினைப் பயன்படுத்தி செயல்படுத்தி வருகின்றது. மேற்படி மைய அரசின் சிறப்பு நிதியுதவி போன்று மாநில சிறப்பு நிதியுதவி ரூ.25.00 கோடியில் (ரூபாய் இருபத்தைந்து கோடி மட்டும்) ஒவ்வொரு ஆண்டும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் திறன்வளர்க்கும் பயிற்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

3. இப்பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துவது தொடர்பாக ரூ.25.00 கோடிக்கான உரிய முன்மொழிவை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார். இதனடிப்படையில், மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் ரூ.25.00 கோடிக்கான சிறப்பு மாநில நிதியுதவியின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்திற்கென செயல்படுத்தப்படவுள்ள புதிய பயிற்சித் திட்டங்களுக்கான செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

4. மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களது அறிவிப்பின் அடிப்படையில் 2011 – 2012 –ஆம் நிதியாண்டில், சிறப்பு மாநில நிதியுதவித் திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிட கிருத்துவர் பயன்பெறும் வகையில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களைச் (பயிற்சி வாரியான விவரங்கள் அட்டவணையில் இணைக்கப்பட்டுள்ளது) செயல்படுத்த தாட்கோ மூலம் ரூ.25,00,00,000/– (ரூபாய் இருபத்தைந்து கோடி மட்டும்) மாநில அரசின் சிறப்பு நிதியுதவியாக ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகின்றது.

5. சிறப்பு மாநில நிதி மூலம் நடைமுறைப்படுத்தப்படும் பயிற்சித் திட்டங்கள்:-

(i) ஆரம்ப நிலை செயல்திறன் பயற்சிகள் – ரூ.258.00 இலட்சம்

(ii) தேசிய நிறுவனங்களான Apparel Training & Design Centre (ATDC), National Institute of Fashion Technology (NIFT), Central Institute of Plastic Engineering Technology (CIPET), Central Footwear Training Institute (CFTI), Footwear Design & Development Institute (FDDI) & National Film Development Corporation (NFDC)–ல் அளிக்கப்படும் பயிற்சிகள் – ரூ.207.00 இலட்சம்

(iii) விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் போக்குவரத்து மேலாண்மை ஆகிய பயிற்சிகள் – ரூ.130.00 இலட்சம்.

(iv) மக்கள் நலம் பேணுதல் குறித்த பயிற்சிகள் – ரூ.97.20 இலட்சம்

(v) தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகள் (IT&ITES) - ரூ.893.80 இலட்சம்

(vi) போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகள் – ரூ.264.00 இலட்சம்

(vii) தொலைத் தொடர்பு சார்ந்த பயிற்சி – ரூ.25.00 இலட்சம்

(viii) ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணவ / மாணவிகள் 6–ஆம் வகுப்பு முதல் தொடர்ந்து 12 –ஆம் வகுப்பு வரை தனியார் உண்டு உறைவிடப் பள்ளியில் சேர்த்தல் (385 ஊராட்சிகள் / ஒரு நபர் வீதம்). – ரூ.500.00 இலட்சம்.

(ix) நிர்வாகம்/விளம்பரம்/விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றிற்கான செலவினம் – ரூ.125.00 இலட்சம்

--------

மொத்தம் – ரூ.2500.00 இலட்சம்

--------

**<u>(i) ஆரம்ப நிலை செயல்திறன் பயிற்சிகள்:</u> ரூ.258.00 இலட்சம்**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட இளைஞர்களுக்கு, கனரக வாகன ஒட்டுனர்களுக்கான பயிற்சி அளிக்கப்பட்டால் வேலைவாய்ப்பு பெற ஏதுவாகும் என்பதால், இப்பயிற்சியினை அரசு நிறுவனமான சாலை போக்குவரத்து நிறுவனம் (Institute of Road Transport), தரமணி, சென்னை மூலம் அளிக்கப்படும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர்களுக்கு ஆரம்ப நிலை திறன் பயிற்சிகளான ஜேசிபி, பொக்கலின், போர்க் லிப்ட், மின் பணியாளர், ஏ.சி.மெக்கானிக், டீசல் மெக்கானிக், பிட்டர், மோட்டார் மெக்கானிக், மற்றும் கணினி இயக்குதல் (**Computer Literacy**) போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டால் உள் நாட்டிலும், வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதால், இப்பயிற்சிகள் மாநில அரசின் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அரசு தொழில் பயிற்சி நிலையங்கள் (Government ITI) மூலம் வழங்கப்படும்.

அழகுக்கலை, தையல் கலை போன்ற பயிற்சி பெற்றவர்களுக்கு சுய தொழில் மற்றும் தனியார் நிறுவனங்களில் அதிக அளவு வேலைவாய்ப்பு உள்ளதால் இப்பயிற்சிகள் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை (NCVT மற்றும் SCVT) அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களின் மூலம் அளிக்கப்படும்.

மேற்காணும் பயிற்சிகள் 2350 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட இளைஞர்களுக்கு ரூ.258.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

**(ii) <u>தேசிய நிறுவனங்கள் மூலம் பயிற்சி:</u> ரூ.207.00 இலட்சம்**

தேசிய நிறுவனங்களான ஆடை தயாரித்தல் மற்றும் வடிவமைப்பு பயிற்சி நிறுவனம் (ATDC), தேசிய ஆடை அலங்காரத் தொழிற் நுட்ப நிலையம் (NIFT), மத்திய பிளாஸ்டிக் தொழில் நுட்ப நிலையம் (CIPET), மத்திய காலணி தயாரித்தல் பயிற்சி நிறுவனம் (CFTI), காலணி வடிவமைத்தல் வளர்ச்சி நிறுவனம் (FDDI) மற்றும் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் (NFDC) போன்ற மத்திய அரசு நிறுவனங்களின் மூலம் முறையே ஆயத்த ஆடை வடிவமைப்பு, பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல், காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரித்தல், திரைப்படம் சார்ந்த காட்சி ஊடகம், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு ஆகிய பயிற்சிகள் 1500 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட இளைஞர்களுக்கு ரூ.207.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

**<u>(iii) விருந்தோம்பல் மற்றும் சில்லரை மேலாண்மை சார்ந்த பயிற்சி :</u> ரூ.130.00 இலட்சம்**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர்களுக்கு உணவு தயாரித்தல் மற்றும் உணவு பரிமாறல் போன்ற பயிற்சிகளுக்கு சிறந்த உணவு விடுதிகளில் வேலை வாய்ப்பு கிடைப்பதால் மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்க தொழில்

நுட்பவியல், துவாக்குடி (State Institute of Hotel Management & Catering Technology, Thuvakudi) திருச்சி என்ற நிறுவனத்திலும் மற்றும் தமிழக அரசின் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கட்டுப்பாட்டில் NCVT / SCVT அங்கீகாரம் பெற்ற தொழிற் பள்ளிகள் மூலமும் இப்பயிற்சி அளிக்கலாம். மேலும், சில்லரை மேலாண்மை பயிற்சி பெற்றவர்களுக்கு தனியார் அங்காடிகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள ஏதுவாக, இப்பயிற்சியினை உள்நாடு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுத் தர உத்திரவாதம் அளிக்கும் நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படும்.

மேற்கண்ட பயிற்சிகள் 1500 நபர்களுக்கு ரூ.130.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

<u>(iv) மக்கள் நலம் பேணுதல் குறித்த பயிற்சிகள்:</u> **ரூ.97.20 இலட்சம்**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மகளிருக்காக நர்சிங் கவுன்சிலில் (தாதியர் குழுமம்) அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிறுவனங்களின் மூலம் உதவி செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் என்ற 18 மாத ANM பயிற்சி அளிக்கப்படும்.

மேலும் தேசிய மற்றும் மாநில அளவில் நற்பெயர் பெற்ற கண் மருத்துவமனைகளில் கண் சிகிச்சைக்கான உதவியாளர் (Opthalmic Nursing Assistant) பயிற்சி பெற்றவர்கள் தனியார் கண் மருத்துவமனையில் வேலை பெற வாய்ப்பு உள்ளதாலும், கண் கண்ணாடியக சான்றிதழ் பயிற்சி (Certificate in Optical Dispensing) மற்றும் மருத்துவ ஆய்வுக் கூட தொழில் நுட்பாளர்களுக்கும் சுயதொழில் தொடங்கவும் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிய வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதாலும், இப்பயிற்சிகளை 400 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட இளைஞர்களுக்கு ரூ.97.20 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

<u>(v) தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகளில் பயிற்சி (IT & ITES):</u> **ரூ.893.80 இலட்சம்**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மாணவ / மாணவிகளுக்கு தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகளில் வேலை வாய்ப்பு பெற பல்வேறு பயிற்சிகளான C&C++ Programming, VC++ Programming, CISCO Router Administration, AutoCAD, Computer Hardware, Networking & Administration, Computer Hardware Maintenance & Servicing, Tally 9.0, Multimedia, Pro-E, Desk Top Publishing, Visual Basic, Windows & MS Office, Total Station, ANSYS, Civil CAD, Electrical CAD, Garment CADD - Designing, Cutting, Pattern Making, Fashion Designing using REACH CAD software, Computer Aided Embroidery Designing, Textile CADD - Weaving Designing, Net Programming, ASP.Net, Architectural CAD, Photoshop / Flash & 3D MAX, SCADA & PLC Programming, CNC Machines Programming & Operations, Web Designing, Java Programming, Internet Awareness, Basic Computer Applications, Computer Servicing & Assembling, HTML, Oracle & SQL Server ஆகிய பயிற்சிகள் 5500 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட இளைஞர்களுக்கு ரூ.613.80 இலட்சம் செலவில் தொழில் நுட்ப கல்வி இயக்ககம் மூலம் அளிக்கப்படும்.

பொறியியல் மற்றும் கலை கல்லூரிகளில் இறுதியாண்டு பயின்று வரும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட இளைஞர்களுக்கு IT Finishing School (Technical) & IT Finishing School (Non-Technical) பயிற்சி அளிக்கப்படும்.

மேற்கண்ட பயிற்சிகள் 4000 நபர்களுக்கு ரூ.280.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும். தமிழகத்தில் உள்ள அண்ணா, பாரதியார் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகங்களில் பயிற்சி அளிக்க முன்னுரிமை தரலாம். பல்கலைக் கழக சான்றிதழ் பெற்று வேலைவாய்ப்பு பெற வாய்ப்பு அளிக்கலாம். தலைச்சிறந்த தனியார் நிறுவனங்களில் வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளதால் இப்பயிற்சி அளிப்பதற்கான பயிற்சி நிறுவனத்தை தெரிவு செய்ய தனியாரிடம் ஒப்பந்தப்புள்ளி கோரும்போது தாட்கோ 188-வது இயக்குநர் குழுமத்தில் அறிவுறுத்தியபடி கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.

(அ) ஆண்டு ஒன்றுக்கு சராசரி குறைந்த பட்சம் ரூ.40.00 இலட்சம் Turnover உள்ள நிறுவனங்கள்.

(ஆ) ஏற்கனவே தாட்கோ மூலம் பயிற்சி அளிக்க பணி ஆணை வழங்கப்பட்டு ஒப்பந்தம் செய்து, பயிற்சி நடத்தப்படாமல் இருப்பின் அத்தகைய நிறுவனங்கள் Defaulters என கருதப்பட்டு தாட்கோ ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்ள தகுதியின்மையாகக் கொள்ளலாம்.

**(vi) <u>போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகள்: ரூ.264.00 இலட்சம்</u>**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட இளைஞர்களுக்கு மென் திறனை (Soft Skill) பெறவும், ஆங்கிலப் பேச்சாற்றல் திறனை (Communicative English) பெறவும், ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகளில் தங்கி பட்டப்படிப்பு பயிலும் மாணவ / மாணவிகளுக்கும் ஆதிதிராவிட பழங்குடியினர் நலப்பள்ளிகளில் பயிலும் 9,11 ஆம் வகுப்பு மாணவ / மாணவியருக்கும் வழங்கப்படும்.

இந்திய உயர் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து படிப்பதற்கு CAT / XAT போன்ற நுழைவுத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவது அவசியம் என்பதால் அதற்கான பயிற்சி வழங்கலாம். மேலும் பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர் போன்ற படிப்புகளில் ஆதிதிராவிட இளைஞர்களின் ஆர்வத்தை அதிகரிக்க இப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு பயிற்சி கட்டணங்களுக்கான நிதியுதவியும், IIT-JEE, AIEEE போன்ற நுழைவுத் தேர்வுகளில் வெற்றி பெற்று சிறந்த தொழில் நுட்பக்கல்லூரிகளில் பொறியியல் படிக்க நுழைவுத் தேர்வுக்கு எதிர்கொள்ளத் தேவையான பயிற்சிக்கும், வங்கித் தேர்வு, ரயில்வே தேர்வு, காப்பீட்டு நிறுவனங்களால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று வேலைவாய்ப்பு பெறும் வகையில் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகள் அளிக்கப்படும்.

மேலும் வளர்ந்து வரும் தனியார் துறைகளின் வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்களில் வேலைகளுக்கு உத்தரவாதத்துடன் கூடிய பயிற்சி அளிக்கப்படும்.

மேற்கண்ட பயிற்சிகள் 5910 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட இளைஞர்களுக்கு ரூ.264.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

**(vii) <u>தொலைத் தொடர்புச் சார்ந்த பயிற்சி</u>: ரூ.25.00 இலட்சம்**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட இளைஞர்களுக்கு தொலைத் தொடர்பு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற ஏதுவாக தொலைத் தொடர்பு சார்ந்த பயிற்சிகளை 50 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட இளைஞர்களுக்கு ரூ.25.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும். மேலும், தொலைத் தொடர்புச் சார்ந்த பயிற்சிகளை அளிக்க Bharat Sanchar Nigam Limited (BSNL) நிறுவனத்திற்கு முன்னுரிமை வழங்கலாம்.

**(viii) <u>ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணவ / மாணவியர்களை நற்பெயர் பெற்ற தனியார் உண்டு உறைவிடப் பள்ளிகளில் சேர்த்தல்:</u> ரூ.500.00 இலட்சம்**

தமிழ் நாட்டில் 5–ஆம் வகுப்பு முடித்து 6–ஆம் வகுப்பு செல்லும் ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணவ மாணவியர்களை ஒரு தனித்தேர்வு நடத்தி வட்டாரத்திற்கு ஒரு மாணவர் வீதம் தேர்ந்தெடுத்து மொத்தமுள்ள 385 வட்டாரங்களில் (Blocks) 385 மாணவ / மாணவியரை நற்பெயர் பெற்ற சிறந்த உண்டு உறைவிடப் பள்ளிகளில் 6–ஆம் வகுப்பில் சேர்த்து அவர்களைத் தொடர்ந்து பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் திட்டத்தின் கீழ் 2011-12–ஆம் ஆண்டில் 5–வது வகுப்பிலிருந்து 6–ஆம் வகுப்பு சேர்ந்து பயிலவும், 2010-11–ஆம் ஆண்டில் 6–ஆம் வகுப்பு சேர்ந்து பயின்ற மாணவர்கள் நடப்பாண்டில் 7–ஆம் வகுப்பு பயிலவும், 2009-10–ஆம் ஆண்டில் 6–ஆம் வகுப்பு சேர்ந்து பயின்ற மாணவர்கள் நடப்பாண்டில் 8–ஆம் வகுப்பு பயிலவும், 2008-09-ஆம் ஆண்டில் 6–ஆம் வகுப்பு சேர்ந்து பயின்ற மாணவர்கள் நடப்பாண்டில் 9–ஆம் வகுப்பு பயிலவும், ஆக மொத்தம் 1540 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.500.00 இலட்சம் செலவில் அளிக்கலாம். இத்திட்டம், ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும்.

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 – ஆதிதிராவிடர் நலன் – 277– கல்வி – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KR – சிறப்புக்கூறு திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்கான நலத் திட்டங்கள் – 09 உதவித் தொகை – 09 ஏனையவை

(த.தொ.கு.2225 01 277 KR 0998)

7. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட ரூ.25,00,00,000/- (ரூபாய் இருபத்தி ஐந்து கோடி மட்டும்) செலவினம் தொடர்புடைய திட்டங்களை ஆணையர், ஆதி திராவிடர் நலன் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். இதற்கான செலவினம் பணமாக வழங்காமல் தாட்கோவின் கீழ்க்காணும் அலுவலர் பெயர் வைப்புக் கணக்கு தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர்வரவாக (Contra Credit) வரவு வைக்கப்படவேண்டும். இதற்கான அதிகாரம் ஆதி திராவிடர் நல ஆணையருக்கு அளிக்கப்படுகிறது.

8443 – உரிமையியல் வைப்புத் தொகைகள் – 800 – இதர வைப்புத் தொகைகள் – BY – தமிழ்நாடு வீட்டுவசதி வளர்ச்சிக் கழக வைப்புத் தொகைகள் தாட்கோவின் வைப்புத் தொகைகள் (தாட்கோ)

(DPC:8443-00-800-BY-0004) (Outgo)
(DPC:8443-00-800-BY-000G) (Receipt)

8. மேற்கண்ட பயிற்சிகளுக்கான திட்டங்களைச் செயல்படுத்திட நிர்வாக செலவினம் 2 விழுக்காடும், விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு முகாம்களுக்காக 2 விழுக்காடும், திட்டசெயலாக்க கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு பணிகளுக்கு 1 விழுக்காடும், ஆக மொத்தம் 5 சதவீத தொகையான ரூ.125.00 இலட்சத்தினைப் பயன்படுத்திக்கொள்ள மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

9. தனியார் நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படவுள்ள பயிற்சிகளுக்கு பயிற்சி நிறுவனங்கள் குறைந்தது 50 விழுக்காடு வேலை வாய்ப்பு பெற்றுத்தர வேண்டும் என்ற அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பயிற்சி நிறுவனங்கள் தெரிவு செய்யப்படவேண்டும் எனவும் பயிற்சி திட்டங்களிலும் / பயிற்சிக்கான ஒதுக்கீடு செய்த தொகையிலும் சிற்சில மாற்றங்கள் செய்து திட்டங்கள் / பயிற்சிகள் அளிக்க மேலாண்மை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கவும், மற்றும் தாட்கோவால் நடைமுறைப்படுத்தப்படும் பயிற்சி / திட்டங்களுக்கு உரிய வழிகாட்டு நெறிகளை செயல்படுத்தவும், நியமன உரிமை பெறாத பயிற்சி நிறுவனங்கள் மூலம் பயிற்சியாளர்கள் தெரிவு செய்வதில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தச் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 (Tamil Nadu Transparency in Tender Act 1998 & Rules 2000) பின்பற்றப்பட வேண்டும் எனவும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

10. தாட்கோவால் நடைமுறைப்படுத்தப்படும் பயிற்சி திட்டங்களுக்கு உரிய வழிகாட்டி நெறிமுறைகளை தாட்கோ நிர்ணயித்து செயல்படுத்த வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

11. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 01/ ஆதி(ம)பந/ 2012, நாள் 4.1.2012–ல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.சு. ஜீவரத்தினம்
அரசு செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை – 101.
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை – 5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை – 5
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை – 5
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18
மாநில கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை–1) சென்னை – 35
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 6.

நகல்
நிதித் துறை, சென்னை – 9
திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை – 9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலரின் தனிச்செயலர், சென்னை – 9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கமபா) (ஆதிந7) (ஆதிந5) (அநமு1) (ஆதிந3) (ஆதிந4) (ஆதிந8) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## பயிற்சி வாரியான விவர அட்டவணை

| வ எண் | பயிற்சியின் பெயர் | செயல் இலக்கு எண்ணிக்கை | நிதி இலக்கு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| அ. | **ஆரம்பநிலை செயல் திறன் பயிற்சி** | | |
| | சாலை போக்குவரத்து நிறுவனம் (IRT) மூலம் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி | 100 | 20.00 |
| | வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரகம் மூலம் ஜேசிபி, பொக்கலைன், போர்க் லிப்ட் இயக்குபவர், மின் பணியாளர், ஏ.சி. மெக்கானிக், டீசல் மெக்கானிக், பிட்டர், மோட்டார் மெக்கானிக் மற்றும் கணினி இயக்குதல் (computer literacy) பயிற்சி | 1750 | 202.50 |
| | அழகுக் கலை பயிற்சி (பெண்களுக்கானது), தையல் கலை பயிற்சி | 500 | 35.50 |
| | **கூடுதல்** | **2350** | **258.00** |
| ஆ. | **தேசிய நிறுவனங்கள் மூலம் பயிற்சி** | | |
| | ATDC & NIFT மூலம் ஆயத்த ஆடை வடிவமைப்புப் பயிற்சி, CIPET மூலம் பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல் பயிற்சி, CFTI & FDDI மூலம் காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி, NFDC மூலம் திரைப்படத் துறை சார்ந்த பயிற்சி மற்றும் மத்திய, மாநில அரசின் பயிற்சி நிலையங்கள் மூலம் பிற பயிற்சிகள் | **1500** | **207.00** |
| இ. | **விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் போக்குவரத்து மேலாண்மை சார்ந்த பயிற்சிகள்** | | |
| | உணவு தயாரித்தல் பயிற்சி | 500 | 54.00 |
| | உணவு பரிமாறுதல் பயிற்சி | 500 | 59.00 |
| | சில்லரை மேலாண்மை பயிற்சி | 500 | 17.00 |
| | **கூடுதல்** | **1500** | **130.00** |
| ஈ | **மக்கள் நலம் பேணுதல் குறித்த பயிற்சிகள்** | | |
| | உதவி செவிலியர் மற்றும் பேறுகால உதவியாளர் பயிற்சி (மகளிர்) (ANM) | 100 | 50.00 |
| | கண்சிகிச்சை உதவியாளர் பயிற்சி | 100 | 10.80 |
| | கண் கண்ணாடியக சான்றிதழ் பயிற்சி | 100 | 24.40 |
| | மருத்துவ ஆய்வுக் கூட தொழில் நுட்பாளர் பயிற்சி | 100 | 12.00 |
| | **கூடுதல்** | **400** | **97.20** |
| உ. | **கணினி மற்றும் தகவல் தொழில் நுட்ப பயிற்சிகள்** | | |
| | தமிழக அரசின் தொழிற் நுட்ப கல்வி இயக்ககம் மூலம் C&C++ Programming, VC++ Programming, CISCO Router Administration, AutoCAD, Computer Hardware, Networking & Administration, Computer Hardware Maintenance & Servicing, Tally 9.0, Multimedia, Pro-E, Desk Top Publishing, Visual Basic, Windows & MS Office, Total Station, ANSYS, Civil CAD, Electrical CAD, Garment CADD - Designing, Cutting, Pattern Making, Fashion Designing using REACH CAD software, Computer Aided Embroidery Designing, Textile CADD - Weaving Designing, Net Programming, ASP.Net, Architectural CAD, Photoshop / Flash & 3D MAX, SCADA & PLC Programing, CNC Machines Programming & Operations, Web Designing, Java Programming, Internet Awareness, Basic Computer Applications, Computer Servicing & Assembling, HTML, Oracle & SQL Server ஆகிய பயிற்சிகள் | 5500 | 613.80 |

| | | | |
|---|---|---|---|
| | IT – Finishing School – Technical மற்றும் | 2000 | 1[illegible].00 |
| | IT –Finishing School – Non -Technical | 2000 | 130.00 |
| | **கூடுதல்** | **9500** | **893.80** |
| **ஊ.** | **போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகள்** | | |
| | CA / CWA படிப்புகளுக்கான நிதியுதவி | 210 | 25.00 |
| | CAT / XAT போன்ற தேர்வுகளுக்கான பயிற்சி | 50 | 9.00 |
| | IIT-JEE / AIEEE போன்ற தேர்வுகளுக்கான பயிற்சி | 50 | 25.00 |
| | ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி | 5000 | 140.00 |
| | போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி (BSRB /LIC's/RRB) | 500 | 20.00 |
| | தனியார் வங்கி / காப்பீடு துறைகளில் வேலை வாய்ப்புடன் கூடிய பயிற்சி | 100 | 45.00 |
| | **கூடுதல்** | **5910** | **264.00** |
| எ. | தொலைத் தொடர்பு சார்ந்த பயிற்சி | | |
| | தொலைத் தொடர்பு பயிற்சி | **50** | **25.00** |
| ஏ. | ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணவ / மாணவியர்களை நற்பெயர் பெற்ற தனியார் உண்டு உறைவிடப் பள்ளிகளில் சேர்த்தல் **(385 x 4)** | **1540** | **500.00** |
| ஐ. | நிர்வாகம் / விளம்பரம் / விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றிற்கான செலவினம் | **0** | **125.00** |
| | மொத்தம் | **22750** | **2500.00** |

ஆ.சு. ஜீவரத்தினம்,
அரசு செயலாளர்.

/உண்மை நகல்/

(signature)
பிரிவு அலுவலர்.